காஞ்சிபுரம் மாவட்டம்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரை: 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும் அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் காண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. வேலையை பலவேறு சிறு பணிகளாக பிரிப்பதை _______ என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. பின்வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல்

3. ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள் இதை எதற்கு உபமானமாக கூறுவார்கள்
அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணியமர்த்தல் ஈ) இயக்குவித்தல்

4. _______ உதவியால் அதிகாரப்பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
அ) முதுகலை பணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

5. மூலதனச் சந்தை என்பது _______ க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி இ) நீண்ட கால நிதி ஈ) குறுகிய கால நிதி

6. சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாக மாற்றும் நிதி நிறுவனங்களையே _______ என்கிறோம்.
அ) பரஸ்பர நிதி ஆ) துணிகர நிதி நிறுவனம்
இ) ஏட்டுக்கடன் தரகு முகமை நிறுவனம் ஈ) இந்திய உடனடி பங்கு மாற்றகம்

7. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

8. வணிக மாற்றுச் சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை _______ என்று அழைக்கலாம்
அ) வணிகத்தாள் சந்தை ஆ) கருவூல இரசீது சந்தை
இ) வணிக இரசீது சந்தை ஈ) மூலதனச் சந்தை

9. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

10. பங்குச் சந்தை மாற்றங்கள் தனிப்பட்ட முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைகள் பத்திரங்களில் வர்த்தகத்தை எளிதாக்கும் எனக் கூறியவர்
அ) ஹஸ்பண்ட் மற்றும் டோகேர்ரி ஆ) பத்திரங்கள் ஒப்பந்தச்சட்டம் 1956
இ) ஹேஸ்டிங்ஸ் ஈ) பேராசிரியர் ரெட்டின்

11. தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு _______ ஆகும்.
அ) ஜனவரி 1996 ஆ) ஜீன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

12. மனித வளம் என்பது ஒரு _______ சொத்து
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா
இ) நிலையான ஈ) நடப்பு

13. விளம்பரம் என்பது ஒரு _______ ஆட்சேர்ப்பு வளமாகும்
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

14. தேர்வு பொதுவாக ஒரு _______ செயலாக கருதப்படுகிறது.
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை ஒன்றும் இல்லை

15. பின்வருவனவற்றில் எவை சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை மேம்படுத்துகிறது.
அ) பயிற்சி ஆ) தேர்ந்தெடுப்பு இ) ஆட்சேர்ப்பு ஈ) செயல் திறன் மதிப்பீடு

16. உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

17. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுளக கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக் கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக்கூறு ஈ) விலை கூறு

18. தூய சில்லரை விற்பனையாளர் ______ என அழைக்கப்படுவர்
அ) சந்தை உருவாக்குனர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள்
இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்
19. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990
20. நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ______ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்.
அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

## பகுதி - II

II. குறிப்பு:- 1. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 2 = 14
2. வினா எண் 30 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22. முக்கிய முடிவுப்பகுதிகள் என்பது என்ன?
23. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
24. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச்சந்தைகளை பற்றி எழுதுக.
25. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
26. தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன?
27. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
28. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
29. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
30. தேர்வு நடவடிக்கையில் அடுத்த நிலை என்ன?

## பகுதி - III

III. குறிப்பு 1. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 3 = 21
2. வினா எண் 40 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும்.
32. இரண்டாம் நிலைச்சந்தை – சிறு குறிப்பு வரைக.
33. கருவூல ரசீதின் வகைகளை விவரி?
34. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?
35. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
36. பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறு குறிப்பு வரைக?
37. சந்தையிடுகை கலவை என்பது பற்றி நீவிர் அறிவது யாது? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும்.
38. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
39. நிவர்ரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
40. ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய மீனாக இருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய குளத்தில் ஒரு பெரிய மீனாக இருப்பது எந்தவித சந்தையில் கூறப்பட்டுள்ளது? விளக்குக?

## பகுதி - IV

IV. குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி (ஏதேனும் 5) (அல்லது)
நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?
42. விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் என்ன? (ஏதேனும் 5) (அல்லது)
நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் (ஏதேனும் 5)
43. பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரிக்க (ஏதேனும் 5) (அல்லது)
பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையில் இருந்து வேறுபடுகிறது விளக்குக.
44. பணச்சந்தை மற்றும் மூலத்னச் சந்தை இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி (ஏதேனும் 5) (அல்லது)
பல்வேறு வகையான சோதனைகள்ளை சுருக்கமாக விளக்குக. (ஏதேனும் 5)
45. செபியின் பணிகளை விவரி (ஏதேனும் 6) (அல்லது)
பணிவழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
46. மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் 5) (அல்லது)
பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது.
47. ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக. (அல்லது)
சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி?